**இணைப்பு - 2**

**500 மற்றும் 1,000 ரூபாய் மதிப்பிலக்க நோட்டுகள் சட்டப்படி செல்லுபடியாகும் நிலையிலிருந்து விலக்கிக்கொள்ளப்படுகின்றன - நோட்டுகளின் முக்கிய அம்சங்கள்**

1. இந்திய ரிசர்வ் வங்கியால் நவம்பர் 08, 2016 வரை வெளியிடப்பட்டு வந்த மகாத்மா காந்தி வரிசை நோட்டுகளில் ரூ. 500 மற்றும் ரூ. 1000 மதிப்பிலக்க ரூபாய் நோட்டுகளின் (இவை பின்னர் குறிப்பிட்ட நோட்டுகள் எனக் குறிப்பிடப்படும்) சட்டப்படி செல்லுபடியாகும் தன்மையை இந்திய அரசாங்கம் எண் 2652, நவம்பர் 08, 2016 தேதியிட்ட அறிவிக்கை மூலம் ரத்து செய்து விட்டது. இந்த நோட்டுகள் நவம்பர் 09, 2016 முதல் பட்டுவாடா அல்லது கணக்குத் தீர்வுக்கு சட்டப்படி செல்லுபடியாகாது.

2. வங்கி அல்லது கருவூலம் அல்லாத ஒரு நபர், குறிப்பிட்ட நோட்டுகளை வைத்திருப்பாரானால், அவற்றை, இந்திய ரிசர்வ் வங்கியின் 19 வழங்கல் அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை வங்கிகள், தனியார்துறை வங்கிகள், பன்னாட்டு வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் கிளைகளில் டிசம்பர் 30, 2016 அன்றும் / வரையிலும், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாற்றிக் கொள்ளலாம்.

(a) மொத்தம் ரூ. 4000 மதிப்பு வரையுள்ள குறிப்பிட்ட நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கியால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் (இணைப்பு-5-ல் உள்ளபடி), அடையாளச் சான்றாவணத்துடன், வங்கிகளில் கொடுத்து செல்லுபடியாகும் எந்தவொரு மதிப்பிலக்க நோட்டுகளாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

(b) மாற்றப்படும் நோட்டுகளின் மதிப்பு ரூ. 4000-த்தைத் தாண்டுமானால், அதிகமாக உள்ள தொகை அளிப்பவரின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும. குறிப்பிட்ட நோட்டுகளை வங்கிக்கிளைகள் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் வழங்கல் அலுவலகங்களில் மாற்றிக்கொள்வதற்கான உச்சவரம்பு ரூ. 4000 என்பது இந்த அறிக்கை வெளியான நாள்தொடங்கி 15 நாட்களுக்குப்பின் மறுபரிசீலனை செய்யப்படும்.

(c) குறிப்பிட்ட நோட்டுகளை வங்கிக் கணக்கு உள்ள கிளைகளில் அவரவர் கணக்குகளில் டெபாசிட் செய்திட உச்சவரம்பு ஏதுமில்லை. .

(d) வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர் செலுத்தும் இந்த குறிப்பிட்ட நோட்டுகளின் மதிப்பு, உரிய வங்கிநடைமுறையைப் பின்பற்றி, அடையாளச் சான்றாவணம் காட்டப்பட்டபின், அவரின் கணக்கில் வரவுவைக்கப்படும்.

(e) மூன்றாம் நபருக்காக (அடுத்தவர்) குறிப்பிட்ட நோட்டுகளை அந்தநபரின் கணக்கில் வரவுவைக்க செலுத்த வேண்டுமானால், அதன்பொருட்டு, செலுத்தும் நபருக்கு உரிய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். செலுத்துபவர் தனது அடையாளச் சான்றாவணத்தைக் கண்பிக்க வேண்டும். அதன் பின், செலுத்தப்பட்ட நோட்டுகளின் மதிப்பு மூன்றாம்நபருடைய கணக்கில் வரவுவைக்கப்படும்.

(f) நடப்பிலுள்ள உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் (KYC) நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத வங்கிக் கணக்குகளில் அதிகபட்சமாக ரூ.50,000/- வரை டெபாசிட் செய்யலாம்

(g) நவம்பர் 24, 2016 (வேலைநேரம் முடியும் வரை) ஒரு நாளைக்கு ரூ. 10,000 வரை, ஒட்டு மொத்தமாக ஒரு வாரத்திற்கு (அறிவிப்புதொடங்கியநாள்முதல்) ரூ. 20,000 வரை மட்டும் வங்கிக் கணக்கிலிருந்து ஒருவர் வங்கி முகப்பில் எடுக்கமுடியும். இந்த வரம்புகள் பின்னர் மறு பரிசீலனை செய்யப்படும்

(h) இவ்வாறு வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணத்தை எந்தவிதத் தடையுமின்றி, ரொக்கம் தேவையில்லாத வகையில் காசோலை வழங்கவோ, மின்னணு நிதிமாற்றம் (உ-ம். NEFT, RTGS, IMPS, மொபைல் பேங்கிங், இணையதள வங்கிப் பணமாற்றம்) செய்யவோ பயன்படுத்திக்கொள்ளலாம்.

(i) அனைத்து தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் (ATMs) மூலம் நவம்பர் 18, 2016 வரை, ஒரு நாளைக்கு ஒரு அட்டைக்கு ரூ. 2,000 வரை பணம் வழங்கப்படும். அது பின்னர் நவம்பர் 19, 2016 முதல் வரம்புத் தொகை ரூ. 4,000 ஆக உயர்த்தப்படும்.

(j) டிசம்பர் 30, 2016-அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ, இவ்வாறு இந்த ரூபாய் நோட்டுகளை வங்கியில் டெபாசிட் செய்யவோ அல்லது பணமாக மாற்றிக் கொள்ளவோ ஒருவரால் முடியாது போனால், இந்திய ரிசர்வ் வங்கியால் பின்னர் அறிவிக்கப்படும் தேதிவரை, இதற்காக கோரப்படும் குறிப்பிட்ட ஆவணங்களுடன் அளித்தால் மாற்று ஏற்பாடு வசதி செய்து தரப்படும்.